Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 15

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

01. பின்வருவனவற்றுள் பண்புத் தொகையாக அமைவது
    1. பவளவாய் 2. செவ்வாய் 3. அலைவாய் 4. அடைவாய்
02. பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற தொகுதியைத் தெரிவு செய்க
    1. பொருட்பெயர் : மனிதன், விலங்கு, மேசை
    2. குணப்பெயர் : கருமை, வட்டம், சிவப்பு
    3. காலப்பெயர் : கோடை, மார்கழி, காலை
    4. தொழிற்பெயர் : நடத்தல், வந்தவர், ஆடல்
03. பின்வருவனவற்றுள் ஏவல் வாக்கியம்
    1. கதவை மூடுங்கள் 2. அமைதி பேணுக 3. நாடகம் முடிவுற்றது 4. கள்ளமில்லா உள்ளம்
04. காலச்சக்கரம் என்பதில் வந்துள்ள புணர்ச்சி
    1. தோன்றலும் திரிதலும் 2. கொடுதலும் தோன்றலும்
    3. திரிதலும் கெடுதலும் 4. கெடுதலும் திரிதலும்
05. பின்வருவனவற்றுள் பெயர்ப் பகாப்பதம்
    1. சால 2. முள் 3. தவ 4. நட

பகுதி 2

பின்வரும் பாடலைப்படித்து அதன் கீழ் தரப்படுகின்ற வினாக்களுக்கு விடை எழுதுக

1. அவன் காதல் உணர்வுகளை என்னென்று ஒருத்திக்கு
எழுதுவான் வருங்காலம்
அழகு முகம் கீழுதடு இரத்தச்சிவப்பு
பெண்விழுவாள் இவற்றில் மயங்கி

காகம் போல் அவன் விழுந்தவளின்
வேலி ஓரமெல்லாம் கரைந்து திரிவானோ
எழுதவருகின்ற உணர்ச்சிகளை ஒலியாக்கி

வந்திருக்கக் கூடாது
எனக்கு நிறைய வேலைகள் இருக்கின்ற தினம் இன்று
இனியென்ன நானின்லை

அந்த எழுதத்தெரியாத வருங்கால மனிதநதி
போனாலும் நான் இருந்தபடி கதிரையிலே
உலகப்பாடசாலை அனைத்தையுமே
நினைத்துவிட்டு எண்ணுகிறேன்
அந்த நதி வரும் நாளில் சீறி ஒலியெழுப்பி ஓடாது
உறையும் சிறுதுளியாய்

1. எழுத்தறிவின்மையின் அவலம் இக்கவிதையின் ஊடாக எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
2. இப்பாடலில் இடம்பெறும் அணியை விளக்குக.
3. இக்கவிதையின் ஆசிரியர் எழுத்தறிவற்ற அந்த பையனுக்காக எவ்விதம் வருந்துகின்றார்?
4. அவனது அத்தகைய நிலைக்கு காரணமாக எதனை குறிப்பிட விரும்புகின்றார்?